**உங்கள் ஆரோக்கியத்தைப் பாதுகாக்கவும்**

**உங்கள் மனச்சாட்சியைப் பின்பற்றவும்**

**சட்டத்தை மீறாதீர்கள்**

**மேலும் தகவல்களுக்கு**

இஸ்தான்புல் தீர்மான அறிவிப்பின் பொறுப்பாளர் குழு (DECLARATION OF ISTANBUL CUSTODIAL GROUP)
www.declarationofistanbul.org

## சிறு நீரகத்தை வாங்க எண்ணமா?




நீங்கள் அறிய வேண்டியது என்ன...

Dev. 7Dec2005

**முன்னுரை**

சிறுநீரக நோய் முற்றிய நிலையிலுள்ள பல நோயாளிகளுக்கு சிறுநீரக மாற்றமே ஏற்ற சிகிச்சை. உறுப்பு மாற்றம், முன்னேற்றமடைந்த மருத்துவமனையின் சிறந்த சூழ்நிலையில், அனுபவம் மிகுந்த அறுவை நிபுணர்கள் மற்றும் சிறுநீரக மருத்துவர்கள் அடங்கிய குழு தேவைப்படும் அதி நவீன அறுவை சிகிச்சையாகும். உறுப்பு மாற்றத்திற்குத் தேவையான சிறு நீரகங்களை ஒரு**இறந்த தானமளிப்பவர்**அல்லது ஒரு**வாழ்ந்து கொண்டிருக்கும் தானமளிப்பவரிடமிருந்து பெறலாம்.**

இறந்த ஒருவரின் சிறுநீரகத்தைப் பெறுதல் மற்றும் உங்களுக்கு அதன் ஒதுக்கீடு, குறிப்பாக நீங்கள் வசிக்கும் நாட்டின் வழிமுறைகளுக்கு உட்பட்டவையாதலால் அவை இங்கு விவாதிக்கப்படவில்லை.

வாழ்ந்து கொண்டிருக்கும் தானமளிப்பவர், சாதாரணமாக நெருங்கிய இரத்த சம்பந்தமுடைய உறவினராவார். சில நாடுகளில் ஒரு சட்ட அல்லது உணர்வு பூர்வமான உறவு முறை (வாழ்க்கைத்துணை, பங்காளி அல்லது நண்பர் போன்றவர்) தானமளிப்பதற்கு ஒப்புக்கொள்ளப்படுகிறது. இந்த இரு தரப்பிலும், மனப்பூர்வமான அன்பு, நம்பிக்கை மற்றும் பரஸ்பர அக்கறையை வெளிப்படுத்த தானம் அளிக்கப்படுகிறது. தானமளிப்பவரும், பெறுபவரும் அவரவர் செயலின் பயன் வெற்றிகரமாக முடிவதில் அக்கறை உள்ளவர்கள். உறுப்பு மாற்றங்கள், அவற்றைப் பெறுபவருக்கும் அளிப்பவருக்கும் வெளிப்படையாகவும் சட்ட பூர்வமாகவும் செய்யப்படுவதால், மருத்துவ, மனோ தத்துவ மற்றும் சமூகக் கண்ணோட்டங்களில், அவை சாதாரணமாகச் சிறந்த முடிவுகளை அளிக்கின்றன.

எனினும் வாழ்ந்து கொண்டிருப்பவரின் சிறு நீரகங்களைப் பெற வேறொரு வழியும் உண்டு. சிலர், அவசர பண நெருக்கடியால், தங்கள் சிறு நீரகங்களில் ஒன்றை விற்க விருப்பப்படலாம். சிறு நீரகங்களை வாங்குவதும் விற்பதும் " உறுப்பு மாற்ற வர்த்தகம்" என்றழைக்கப்படுகிறது மற்றும் ஏறக்குறைய எல்லா உலக

நாடுகளிலும் இது சட்ட விரோதமானது. மரண தண்டனை நிறைவேற்றப்பட்ட குற்றவாளிகளின் நிறு நீரகங்கள் கூட சில நேரங்களில் விற்கப்படுகின்றன.

சிறுநீரகங்களைப் பணம் கொடுத்து வாங்குவதால் ஏற்படும் சில விளைவுகளை இந்த சிறு வெளியீடு விவாதிப்பதோடு இம்முடிவை விரக்தியின் எல்லையில் நாடுவதையும் தடுக்க முயலுகிறது.

**மிகச்சரியாகச் சொல்வதானால், " உறுப்பு மாற்ற வர்த்தகம்" மற்றும் " உறுப்பு மாற்றப் பயணம்" என்றால் என்ன?**

உறுப்பு மாற்ற வர்த்தகத்தில், தானம் பெறுபவர் மற்றும் அளிப்பவர் நடுவில், தன் சேவைக்குப் பணம் வசூலிக்கும் இடைத்தரகர் மூலம், நேரடியாக அல்லது அடிக்கடி, பணமாகவோ அல்லது குறிப்பிட்ட பொருட் சலுகைகளாகவோ பரிவர்த்தனை நடக்கிறது. தானம் அளிப்பவரும் (உண்மையான வியாபாரி) பணம் பெற்றாலும் அவர் பெறுவது தரகர் பெறுவதை விட மிகக்குறைவே. இந்த வகையில், தானம் பெறுபவர், சட்ட பூர்வமாகப் பெறுவதில் ஏற்படும் செலவை விட அதிகப் பணம் செலவழிக்க நேரிடுகிறது. உங்கள் மருத்துவக் காப்புறுதி குறிப்பாக இத்தகைய வர்த்தக உறுப்பு மாற்றங்களை அனுமதிப்பதில்லை.

உறுப்பு மாற்றத்திற்காக நீங்கள் வசிக்கும் நாட்டை விட்டு வெளியே செல்வது பொதுவாக**உறுப்பு மாற்றப் பயணம் எனப்படுகிறது.** உங்கள் சொந்த நாட்டில் எவ்வளவு கவனமும் அக்கறையும் நீங்கள் பெற முடியுமோ அதை விடக் குறைந்த அளவு அக்கறை மட்டுமே நீங்கள் பெறமுடியும் என்பதால், பல உறுப்பு மாற்ற வல்லுனர்கள் வெளி நாட்டில் உறுப்பு மாற்றச் செயலை ஒப்புக்கொள்வதில்லை.

**உறுப்பு மாற்ற வர்த்தகம் ஏன் சட்ட விரோதமானது?**

உறுப்பு மாற்ற வர்த்தகச் செயலைப் பிரத்தியேகமாகத் தடை செய்ய பல நாடுகளில் சட்டங்கள் உள்ளன. நீங்கள் வசிக்கும் நாட்டில் கூட அனேகமாக அது சட்ட விரோதமானதாக இருக்கலாம்.

உறுப்பு மாற்ற வர்த்தகம் நன்மையை விட அதிகத் தீங்கை விளைவிக்கிறது. தேவையற்ற அபாயங்களுக்கு தானம் அளிப்பவரையும், பெறுபவரையும் அது உள்ளாக்குகிறது மற்றும் தானம் பெறுபவரின் தாய் நாட்டிலும் சிறு நீரகத்தை வாங்கச்செல்லும் நாட்டிலும், உறுப்பு தானச்செயலின் ஆரோக்கியமான வளர்ச்சியை அது சீர்குலைக்கிறது.

**பணம் பெறும் தானம் அளிப்பவருக்கு ஏற்படும் அபாயங்கள் என்ன? இலவசமாகத் தானம் அளிப்பவருக்கு ஏற்படக்கூடிய அபாயங்களை விட அவை அதிகமா?**

சிறு நீரகம் ஒன்றை விற்க விரும்பும் நபர்கள் பொதுவாக ஏழையாகவும் விரக்தியின் எல்லைக்கு தள்ளப்பட்டவர்களாயும் இருக்கிறார்கள். உறுப்புகளை விற்கும் பலர், சமூகத்தின் வறுமை நிலை மற்றும் சுலபமாகத் தாக்கப்படக்கூடிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்று பல ஆய்வுகள் தெரிவிக்கின்றன. அநேக தடவைகளில் அவர்கள் அதிக வளர்ச்சியடையாத பின் தங்கிய நாடுகளைச் சேர்ந்தவர்களாயும் அதிக வளர்ச்சி அடைந்த நாடுகளின் செல்வந்தர்கள் அல்லது கிட்டத்தட்ட அத்தகையவர்களுக்குத் தானம் அளிப்பவர்களாயும் இருக்கிறார்கள். தங்கள் நிதி நிலைமை சரியாகும் மற்றும் வாழ்க்கையின் தரம் மேம்படும் என்ற நம்பிக்கையில் அவர்கள் சிறு நீரகத்தை விற்க எண்ணுகிறார்கள். அவ்வாறு இன்றி அவர்கள் பல தடவை ஏமாற்றமடைகிறார்கள்.

சரியான வழி முறைகளைப் பற்றி அறியாமல் அல்லது தங்கள் செயலில் உள்ள அபாயத்தை உணராமல், காசுக்காக உறுப்புகளை விற்பவர்கள் பல தடவை பொருளாதார அடிப்படையில் பாதிக்கப்படுவது மட்டுமல்லாமல் துஷ்பிரயோகமும் செய்யப்படுகிறார்கள். அதே சமயம் அவர்கள் வற்புறுத்தப் படலாம் மற்றும் மோசமான ஆரோக்கியம் குறித்த தகவல்களை மூடி மறைக்கலாம். அவர்களுடைய சுய பாதுகாப்பு முக்கியமானதாக இல்லாமல் இருக்கலாம்

மற்றும் அப்போது தானம் செய்வது புத்திசாலித்தனமான செயல் அல்ல என்று அறிந்தும் அவர்கள் தானம் செய்ய முடிவு செய்திருக்கலாம். தானம் பெறுபவருக்கு ஏற்படக்கூடிய பின் விளைவுகளைப் பற்றி அவர்களுக்கு அக்கறை இல்லை.

காசுக்காக உறுப்புகளை விற்பவர்கள் பெறும் பணம் சாதாரணமாக அவற்றைப்பெறுபவர்கள் தரகர்களுக்கு அளிக்கும் பணத்தின் மிகச்சிறிய விழுக்காடு மட்டுமல்லாமல், அது விற்பவர்களின் நிதிப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில்லை. உறுப்புகளைப் பெறுபவர்கள் பணத்தின் பெரும் பகுதி மருத்துவ மனைகள், தரகர்கள் மற்றும் இடைத்தரகர் களுக்குப் போகிறது. உறுப்பு விற்பவர்களின் வருமானம், அவர்கள் முன்பு போல் கடுமையாக உழைக்க முடியாததால், மேலும் குறைய வாய்ப்பு உண்டு. உறுப்பு விற்பவர்கள் மனச்சோர்வடையலாம் அல்லது திருமணம் மற்றும் சமூகப் பிரச்சினைகளுக்கு உள்ளாகலாம். அவர்கள் நல்ல ஆரோக்கிய பராமரிப்பு பெற முடியாமல் போகலாம். காசுக்காக உறுப்பு தானமளிப்பவர்களில் பெரும் பாலோர் மற்றவர்களுக்கு சிறு நீரகத்தைத் தானமளிக்கச் சிபாரிசு செய்வதில்லை.

சட்டத்திற்குட்பட்டு சிறு நீரகம் தானமளிப்பவர்ளுக்கு நீண்ட பாதுகாப்பு இருப்பதாக அதிகமான ஆதாரங்கள் குறிப்பிட்டாலும், அத்தகைய ஆதாரங்கள் காசுக்காக விற்பவர்களைப் பொறுத்தவரை இல்லை.
நாம் அறிந்ததெல்லாம், அவர்கள் இலவசமாக தானம் அளிப்பவர்களுக்கு உண்டாகக்கூடிய விளைவுகளைத் தவிற, ஏழ்மை நிலையாலும் சந்தர்ப்பத்தாக்குதல் களாலும் ஏற்படக்கூடிய அபாயங்களையும் எதிர்கொள்ள நேரிடுகிறது என்பதே.

**காசுக்காக விற்பவரின் சிறு நீரகத்தைப் பெறுபவருக்கு ஏற்படக் கூடிய கூடுதல் அபாயங்கள் யாவை?**

சாதாரணமாக சட்டப்படி குற்றமாகையால், பணம் கொடுத்துப் பெற்ற உறுப்புகளின் மாற்றங்கள் பல தடவை மாற்றங்கள் செய்ய உரிமம் பெறாத மருத்துவமனைகள் அல்லது மருந்தகங்களில் நடைபெறுகின்றன மற்றும் இவைகள் அதிகார பூர்வமான மருத்துவ வாரியங்களால் அங்கீகரிக்கப்படுவதிலை. எந்த நாட்டில் உள்ளனவோ அந்த நாட்டின் அறுவை மற்றும் மருத்துவத் தர நிர்ணயங்களுக்கு ஏற்ப இத்தகைய மருத்துவ மனைகள் செயல்பட முடியாமல் போகலாம். இதன் விளைவாக, அதிக ஆபத்து நிலைமைகளுக்கு, அறுவையின் போதோஅல்லது அதன் பின்போ ஆளாக நேரிடலாம்.

மிக மோசமான, சில சமயங்களில் உயிருக்கே உலை வைக்கக்கூடிய, தொற்று போன்ற அதிக அபாய நிலைக்கு இத்தகைய வர்த்தக உறுப்பு மாற்றங்கள் வழி வகுக்கின்றன. தானம் அளித்தவர் சரியாகச் சோதிக்கப்பட்டிருக்க மாட்டார், அல்லது தனக்கு உள்ள ஆரோக்கியக் குறைகளை அறிந்திருக்க மாட்டார் அல்லது தெரிவித்திருக்க மாட்டார். அறுவை சிகிச்சை அறை அல்லது மருத்துவ மனையின் நோயாளியின் அறையில் சுத்தம் மற்றும் சுகாதார நிலை தரக்குறைவாக இருக்கலாம். உறுப்புகளை ஏற்க மறுக்கும் நிலைமையை சரி செய்ய அளிக்கப் படும் மருந்துகள் நோய் எதிர்க்கும் சக்தியை வலுவிழக்கச் செய்யக் கூடுமாதலால், மாற்று உறுப்புகளைப் பெற்றவர்கள் அவற்றைப் பெற்ற நாட்டிலிருந்து தங்கள் நாடுகளுக்கோ அல்லது வீட்டிற்கோ நண்பர்களுக்கோ தொற்று நோய்களைக் கொண்டு செல்லக்கூடிய அபாயம் அதிகம். இத்தகைய தொற்றுகள் தற்சமயம் உபயோகத்தில் இருக்கும் நுண்ணுயிர்க்கொல்லிகளாலும் சிகிச்சை முறைகளாலும் அடக்கப்பட முடியாமல் போகலாம் மற்றும் மரணத்தை விளைவிக்கலாம். அறுவை சிகிச்சையைத் தொடர்ந்து மேற்கொள்ளப் படும் விமானப் பயணங்கள் சரியானதல்ல மற்றும் வேறு பல சிக்கல்களை விளைவிக்கக்கூடும்.

அறுவை சிகிச்சையைத் தொடர்ந்து மேற்கொள்ளப் படும் விமானப் பயணங்கள் சரியானதல்ல மற்றும் வேறு பல சிக்கல்களை விளைவிக்கக்கூடும். மாற்று உறுப்பு பெற்றவருக்கு அறுவை சிகிச்சைக்குப்பின் அளிக்கப்படும் அத்தியாவசியமான மருந்துகள் சரியான அளவில் கொடுக்கப்படாமல் இருக்கலாம். வீடு திரும்பிய பின் இது அவருடைய பராமரிப்பை மிகவும் கடினமாக்குவது மட்டுமல்லாமல் அதன் விளைவைப் பாதிக்கக்கூடும்.

இறுதியாக, சில மாற்று உறுப்பு பெறுவோர் முதல் கட்டத்தில் அவர்கள் சிறு நீரக மாற்றுக்கு ஏற்றவர்களா என்பதை உறுதி செய்யத் தகுந்த சோதனைக்கு உட்படுத்தப்படாமல் போகலாம். மிகவும் அபாயகரமான நிலைமைகள் (இதய நோய், நாட்பட்ட தொற்றுகள் மற்றும் புற்று நோய் போன்றவை) கவனிக்கப் படாமல் போகலாம்: மறுபடியும் இதன் விளைவுகள் உயிருக்கு ஆபத்தை விளைவிக்கலாம்.

**சிறு நீரகத்தைப் பணம் கொடுத்துப் பெறுவது நெறி முறையானதா?**

வர்த்தக ரீதியிலான உறுப்பு மாற்றங்கள் சரியாக கட்டுப்படுத்தப் பட்டால், தானம் அளிப்பவர் மற்றும் பெறுபவர் இருவரும் பயனடைய முடியும் என்பது சிலர் நம்பிக்கை. ஆனால் இன்றைய வரையிலான அனுபவம் இது சரியானதல்ல என்று காட்டுகிறது. பெரும்பாலும், ஏழைகள் அவர்களை விட மிக நல்ல நிலையில் உள்ளவர்களால் துஷ்பிரயோகிக்கப் படுவதே கண்கூடு. வற்புறுத்தல், திட்டமிட்ட குற்றம் மற்றும் மனிதக் கடத்தல் (சர்வதேச மாநாட்டில் இது தடை செய்யப்பட்டுள்ளது) ஆகியவை ஏற்பட்டுள்ளன. வர்த்தக ரீதியிலான உறுப்பு மாற்றம் தானம் அளிப்பவர் மற்றும் பெறுபவரின் உடல் ஆரோக்கியத்திற்கு ஆபத்தை விளைவிக்கிறது மற்றும் மருத்துவ ரீதியாகவும் நெறிமுறைப்படியும் இது சரியானதல்ல. ஏழைகளின் பொருளாதார ரீதியிலான ஜீவிதம் உடல் உறுப்புகளை விற்பதைச் சார்ந்து இருக்கக்கூடாது.

**மாற்று உறுப்புகளின் வர்த்தகத்தைத் தடுத்து நிறுத்த என்ன செய்யப் பட்டு வருகின்றது?**

முன்னிலையிலுள்ள மருத்துவ நிறுவனங்களும் மற்றும் உடல் ஆரோக்கிய வல்லுனர்களும் இந்தச் செயலைத் தடுத்து நிறுத்த ஒ ன்று பட்டுள்ளார்கள். உலக சுகாதார நிறுவனம் [World Health Organization (WHO)] மாற்று உறுப்புகளின் வர்த்தகத்தை உறுதியாக எதிர்க்கிறது.

பல நாடுகள் மாற்று உறுப்புகளின் வர்த்தகத்தைத் தடுக்க உறுப்பு மாற்றப் பயணத்தில் ஈடுபட்டுள்ள மருத்துவ மனைகளை மூடியும் மற்றும் தரகர்களைக் கைது செய்யும் நடவடிக்கைகள் எடுத்துள்ளன. அறுவை சிகிச்சைக்குப் பிறகு உறுப்பு விற்றவரையும், பெற்றவரையும் கைது செய்த சந்தர்ப்பங்களும் உண்டு.

**இஸ்தான்புல்லின் அறிவிப்பு (The Declaration of Istanbul)**

2008ம் ஆண்டு, உறுப்பு வர்த்தக மற்றும் பயணங்களைத் தடுக்க தகுந்த செயல் திட்டங்கள் வகுக்க உலகத்தின் பல்வேறு பகுதிகளைச் சார்ந்த முன்னணி மருத்துவ வல்லுனர்களின் குழு ஒன்று துருக்கியில் உள்ள இஸ்தான்புல்லில் சந்தித்தது.

மாற்று உறுப்புகள் தேவைப்பட்ட நோயாளிகளின் விரக்தி உணர்வை இந்த குழு மதிக்கிறது. அது, பல கொள்கைகளை முன் வைத்தது மற்றும், உலக முழுதிலும் இறந்த, வாழ்ந்து கொண்டிருக்கும் நபர்களின் உறுப்புகள் மாற்றத்தை மேம்படுத்தவும், சரியான முறையில் உறுப்பு அளிப்பவர் மற்றும் பெறுபவர் ஆரோக்கியமும், நல்வாழ்வும் பாதுகாக்கப்படவும், அதே சமயம் துஷ்பிரயோகத்தைத் தடுக்கவும் திட்ட அறிக்கைகளை வடிவமைத்தது. அவர்கள் மேம்படுத்திய கொள்கை ஆவணம் தான்**இஸ்தான்புல்லின் அறிவிப்பு (The Delcaration of Istanbul).**

2010ல்,**இஸ்தான்புல் தீர்மான அறிவிப்பின் பொறுப்பாளர் குழு [Declaration of Istanbul Custodian Group(DICG)]** தீர்மான அறிவிப்பின் கொள்கைகளை சர்வதேச அளவில் மேம்படுத்த ஏற்படுத்தப்பட்டது. DICG,**உறுப்பு மாற்ற சங்கம் [The Transplantation Society (TTS)]** மற்றும்**சர்வதேச சிறுநீரக இயல் சங்கம் [International Society of Nephrology (ISN)]**ஆகிய இரண்டு பெரிய சர்வதேச வல்லுனர்கள் நிறுவனங்களின் ஆதரவு பெற்றது.
80க்கும் அதிகமான சர்வதேச வல்லுனர்கள் சங்கம் மற்றும் அரசு முகமைகள் இஸ்தான்புல்லின் அறிவிப்பை வழிமொழிந்துள்ளன.

இஸ்தான்புல்லின் அறிவிப்பைப் பற்றிய மேல் விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்
www.declarationofistanbul.orgஐ